# வெற்றிடங்கள்

## திட்ட ஊழியரின் ஆட்சேர்ப்பு
## மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP) – கட்டம் II
### (திட்டக் காலம் - 2026-2031)

**கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டத்திற்காக (MWSIP) அரச ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) சுற்றுநிருபத்தின்படி பின்வரும் பதவி நிலைகளுக்காக ''ஒப்பந்த அடிப்படையில்'' திட்ட முகாமைத்துவ ஊழியர் ஆட்சேர்ப்புக்கு தகுதி பெற்ற மற்றும் அர்ப்பணிப்புள்ள இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உள்ளூர் மூலங்களில் பங்களிப்புடன் திட்டத்தின் மொத்த செலவு 536.5 மில்லியன் அமெ. டொலர்கள்.

03/2016 பொது நிர்வாக சுற்றுநிருபம் மற்றும் 2019.03.15 ஆம் திகதிய 01/2019 முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) சுற்றுநிருபத்தின் அட்டவணை 03 இல் 05 ஆவது பத்தியில் பதவி நிலையின் சம்பளம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வெற்றி விபரங்கள்:**

| இல. | வேலை விபரம் / இடம் | சம்பள அளவு | பதவி எண். |
|---|---|---|---|
| 01. | திட்ட முகாமைத்துவ பிரிவு – கொழும்பு | PS01 – PS 06 மற்றும் உதவி ஊழியர் | 71 |
| 02. | திட்ட செயற்படுத்தல் பிரிவு – மடாட்டுகம | | 37 |
| 03. | திட்ட செயற்படுத்தல் பிரிவு | | 38 |

**பொருந்தும் சுற்றுநிருபம்:**

- PS 01-PS06 சம்பள அளவுக்கான 1/2019 MSD சுற்றுநிருபம்
- 03/2016 பொது நிர்வாக சுற்றுநிருபம் மற்றும் உதவி ஊழியர்களுக்கான 1/2019 MSD சுற்றுநிருபம் (உதவி ஊழியர் பதவிக்காக அரச ஆட்சேர்ப்பு நடைமுறை கருத்திற்கொள்ளப்படும்)

விண்ணப்பதாரர்கள் 62 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் தேர்ச்சி மற்றும் அரச ஒழுங்குமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு கட்டாய முன் தேவைகளாகும். இலங்கையில் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் வேலை அனுபவம் கூடுதல் நன்மையாகும்.

தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் மேலுள்ள பதவி நிலைகளுக்கான விண்ணப்பங்களை தமது திணைக்கள தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு www.irrigationmin.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

(மேல் குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தைப் பெறுவதற்கு நிதி அமைச்சு இணையதளத்தைப் பார்க்கவும்)

ஒவ்வொரு பதவிகளுக்கான விண்ணப்பங்களை வெவ்வேறாக கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு கீழ் தரப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு 2026.02.05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**Addl. செயலாளர் (PPM பிரிவு)**
**கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**
**10ஆவது மாடி, இலங்கை மகாவலி அதிகாரசபை,**
**இல. 500, டீ.பி. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10.**

குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர். எந்த வகையான ஆதரவு திரட்டலும் தகுதி இழப்பாக அமைவதோடு அவ்வாறான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**